# மக்கள் மறுவாழ்வு

மலர் : 8 | ஆனி - ஜூன் 1990 | விலை ரூ. 1-00 | இதழ் : 9

### அகதிகள் குறித்த அரசின் உத்தரவு :

# தாயகம் திரும்பியோர்களுக்கு நெருக்கடி !

**1983க்கு பிறகு இலங்கையிலிருந்து இந்தியா வந்து தங்கியுள்ள அனைவருமே தங்கள் பயணச் சான்றிதழ், விசா என்பன தங்களிடம் இல்லையானால் அருகிலுள்ள காவல் நிலையங்களில் தங்களைப்பதிவு செய்துக் கொள்ள வேண்டும் என்று விடுக்கப்பட்டுள்ள அரசின் உத்தரவு தாயகம் திரும்பியோர்களையும் பெரும் பிரச்சனைக்குள்ளாக்கியிருக்கிறது.**

இலங்கையிலிருந்து வருகிற அகதிகளையோ - தாயகம் திரும்பியோர்களையோ ஒட்டு மொத்தமாக ஒன்றாக கணக்கிடுவது தடுமாற்றத்தையும், பாதிப்பையும் உண்டாக்கியுள்ளது,

இலங்கையிலிருந்து வருவகிறவர்கள் எல்லோரும் ஒரே தகுதியை உடையவர்கள் அல்ல ; இவர்களின் வித்தியாசங்கள் இருக்கின்றன. இவர்களில் அகதிகள் வேறு. தாயகம் திரும்பியவர்கள் வேறு - அகதிகளிலும் இலங்கை குடியுரிமைப் பெற்ற இலங்கைத் தமிழர்கள். இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினர்கள் இருக்கிறார்கள். இந்திய வம்சாவளி மக்களிலும் 1964 ஒப்பந்தப்படி இந்தியக் குடியுரிமைப் பெற்று இந்தியாவுக்கு திரும்ப வேண்டியவர்களும் அகதிகளாக வந்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

இவர்களைப் பொறுத்தவரை இவர்களுக்குள்ள வித்தியாசங்கள், இவர்களுக்குள்ள தன்மைகள், பிரச்சனைகள், இங்கு வாழ இவர்களுக்குள்ள உரிமைகளை சரியாக புரிந்துக்கொள்ள வேண்டும்.

தாயகம் திரும்பியோர் 1964ல் இலங்தை இந்தியா அரசுகள் செய்துக் கொண்ட ஒப்பந்தப்படி இந்த நாட்டிற்கு வந்தவர்கள் - வருகிறவர்கள். இவர்கள் சட்டப்படி இந்த நாட்டின் குடியுரிமை பெற்றவர்கள், அரசின் மறுவாழ்வு திட்ட உதவிகளைப்பெற்று தமிழகத்தில் மட்டுமல்ல; கேரளம், கர்நாடகம் ஆந்திரம் - அந்தமானில் கூட குடியேறியவர்கள்.

இவர்கள் 1968 யிலிருந்து வந்துக் கொண்டிருந்தார்கள். இலங்கையில் ஏற்பட்ட கலவரத்தினால் 1983 ஜூலைக்குப் பின் இவர்கள் வரவு நின்று போனது. (ஒப்பந்தப்படி இன்னும் வரவேண்டியவர்கள் ஒரு லட்சத்திற்கு மேல் இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது) இவர்கள் இந்த நாட்டுக்கு வந்த ஐந்து ஆண்டுகளுக்கு பின் இந்த நாட்டின் தேசிய நீரோட்டத்தில் கலந்து விட்டவர்களாக கருதப்படுகிறவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

அகதிகளைப் பொறுத்தவரை இவர்கள் இலங்கை குடியுரிமை பெற்றவர்கள். இலங்கையில் ஏற்பட்டுள்ள மோதல்களால் - வன்முறை செயல்களால் இந்தியாவுக்கு அகதிகளாக வந்துள்ளனர். இவர்கள் அங்கு அமைதி ஏற்பட்டதும் திரும்பிப் போய் விடுவ்வார்கள்.

சமீபத்தில் தமிழகத்தில் ஏற்பட்ட போராளிகளில் மோதல்கள் - சட்டவிரோதமான செயல்களால் அகதிகள் விசயத்தில் தமிழக அரசுக்கும் நடவடிக்கைகளை - கட்டுப்பாடுகளை விதிக்கத் தொடங்கியுள்ளது.

அந்த அடிப்படையில் மேற்படி அரசின் அறிவிப்பு தாயகம் திரும்பியோர்களையும் பாதித்துள்ளது.

இவர்களையும் பதிவு செய்து கொள்ளச் சொல்வது சட்டத்திற்குப் புறம்பானதும்; மனிதாபிமானது மற்றது.

பல இடங்களில் தாயகம் திரும்பியோர்கள் காவல்துறை

(2-ம் பக்கம் பார்க்க)

### ஈ பி ஆர் எல் எஃப் தலைவர்

## பத்மநாபா சுட்டுக்கொலை!

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் பத்மநாபா உட்பட 15 பேர் ஜூன் 19ம் தேதி சுட்டுக் கொள்ளப்பட்டார்கள்.

துப்பாக்கிச் சூட்டின் பத்மநாபா, வட. கிழக்கு மாகாண நிதி அமைச்சர் கிருபாகரன், வட கிழக்கு மாகாண கவுன்சிலர்கள் பத்மநாபன், கோமளராஜன் முகுந்தன், மற்றும் லிங்கம், தர்மன், கருணாகரன் புவி, ரவி, என்பவர்களும் வசந்தா கவிதா என்ற இரண்டு பெண்களும் கொல்லப்பட்டார்கள். உள்ளூர்வாசி ஒருவரும் இதில் இறந்து விட்டார். பலர் இதில் காயமுற்றார்கள்.

O

உறுபசியும் ஓவாப்பிணியும் செருப்பகையும்
சேரா தியல்வது நாடு.

மக்கள் மறுவாழ்வு

மலர்: 8 ஆனி-ஜூன் 1990 இதழ்: 9

# இலங்கைப் பிரச்சனையும் நமது பொறுப்பும்

இலங்கையில் மீண்டும் விடுதலைப்புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் கடும்மோதல்-யுத்தமே ஆரம்பித்து விட்டது. அதைத் தொடர்ந்து மீண்டும் இந்தியாவுக்கு அகதிகள் வர ஆரம்பித்து விட்டனர்.

மீண்டும் ஒரு 'சகோதர யுத்தத்தில்' ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின செயலாளர் நாயகம் பத்மநாபாவும், அவரது இயக்கத்தினரும் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

இவை தமிழ் கூறும் நல்லுலகிற்கு உவப்பான செய்திகள் அல்ல; இலங்கையில் அமைதி பிறக்க வேண்டும்; இலங்கை தமிழர்கள் தமக்குரிய உரிமைகளைப் பெறறு வாழ வேண்டும்; அகதி திரும்பிச் சென்று தமது வரழ்வைத் தொடர வேண்டும்-போராளிகள் மத்தியில் நடக்கும் 'சகோதரயுத்தம்' ஒழிக்கப்பட வேண்டும் என்பதே அனைவரது துடிப்பு. ஆனால் இந்த துடிப்பு தமிழகத்தில் குறிப்பாக தமிழ்த்தலைவர்கள் - அரசியல்வாதிகளிடம் வெறும் 'அரசியல் பிடிப்பாக'த்தான் இருக்கிறது.

தங்கள் லாப நட்டத்துக்கு தக்கப்படி குருடர்கள் பார்த்தயானையாகவே ஈழப்பிரச்சனையைப் பார்ப்பது வேதனைக்குரியது. இவர்களது இந்த பார்வை ஈடுபாடு-பேச்சும்-செயலும் கூட ஈழப்பிரச்சனையை மேலும் சிக்கலாக்க வழி வகுத்திருக்கிறது.

இது விரும்பத்தக்கதல்ல; இதன் மூலம் இலங்கைத் தமிழர்களுக்கு மட்டுமல்ல; தாய் தமிழகத்திற்கும் கூட ஊறு தான் செய்யும். அதை கடந்த கால கசப்பான நிகழ்ச்சிகளில் கண்டிருக்கிறோம்.

ஈழபிரச்சனைக்கு உடனடி தீர்வுகாண வேண்டும்; இதன் மூலம் தான் தமிழகத்திற்கு உண்டாகியிருக்கிற நெருக்கடியும் தீரும். இதன் மூலம் உலகம் வாழ் தமிழர்களில் நெஞ்சில் நிம்மதியும், நம்பிக்கையும் பிறக்கும்.

இதில் நமக்குள் பொறுப்பு மகத்தானது. இதிலே நாம் குளிர்காய நினைப்பது தமிழர்களுக்கு செய்யும் பெரும் துரோகம் மட்டுமல்ல; இது நம்மையே பின் சுடும் என்பது உறுதி. O

## தாயகம் திரும்பியோர்களுக்கு.....

(முதல் பக்கத் தொடர்ச்சி)

யினரால் விசாரிக்கப்படுகின்றனர். இவர்களும் தங்கள் பயண ஆவணங்களை எல்லாம் காட்ட வேண்டும் என்று வற்புறுத்தப் படுகின்றனர்-மிரட்டப் படுகிறார்கள்.

தாயகம் திரும்பியோர்களைப் பொறுத்தவரை - பெரும்பாலானோரால் 'அவர்களது பயண ஆவணங்களை மற்றும் இதர சான்றுகளை •காட்டுவதில் சிரமங்கள் இருக்கிறது.

தாயகம்- திரும்பியோர் தங்களுக்கு அரசு அறிந்த- அளித்து வரும் மறுவாழ்வு உதவிகள் பெறுவதற்காக சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் தமது ஆவணங்களை ஒப்படைத்துவிடுவர். இது குறித்து சான்றிதழ்கள் பெறுவது கூட முடியாதகாரியம். சம்பந்தப்பட்டவர்கள் உரிய காலத்தில் 'இதைக் கொடுப்பதில்லை என்பதோ - பல அலுவலகங்களில் இவர்களது ஃபைல்களையே தேடிப்பிடிக்க முடியாது (இந்த அலுவலகங்களில் பல குளறுபடிகள் இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது)

அதே வேளையில் மறுவாழ்வு உதவிகள் பெற்றுத் தருவதாக இடைத்தரகர்களாலும், காண்டிராக்காரர்களாலும் பல்லாயிரக் கணக்கானவர் ஏமாற்றப்பட்டு இவர்களது சம்பந்தப்பட்ட ஆவணங்களையே பறிகொடுத்தும் இருக்கிறார்கள்.

இந்த நிலையில் இவர்களிடம் சான்றிதழ்கள் ஒப்படைக்க-தாங்கள் சட்டப்படி வந்தவர்கள் என்பதை நிரூபிக்க வேண்டுமென்று வற்புறுத்துவது கொடுமை.

பொதுவாக அரசு சார்ந்த அதிகாரிகளுக்கு - காவல்துறையினருக்கு-பொது மக்களுக்குக் கூட அகதிகளுக்கும் - தாயகம் திரும்பியோர்களுக்குமுள்ள வித்தியாசங்கள் தெரியவில்லை. வேறுபாடுகள் புரியவில்லை.

அது குறித்து கவலைப்படுவதாகவும் இல்லை. மொத்தத்தில் இலங்கையிலிருந்து வந்தவர்கள் என்றே கணக்கில் எடுத்துக் கொண்டு குழப்புகிறார்கள்.

பல இடங்களில் விபரம் புரியாத வீட்டுக்காரர்களும் இவர்கள் 'தாயகம் திரும்பியோர்கள்' என்பது குறித்து புரியாது தெருக்கடிகள் கொடுத்து வருகிறார்கள்.

இலங்கையில் தான் இவர்கள் பிரச்சனைகளுக்கும் - உரிமை மறுப்புக்கும் உட்பட்டு அவஸ்தை பட்டார்கள் என்றால். இங்கும் சட்டப்படி குடியுரிமைகள் பெற்று - அரசின் மறுவாழ்வு உதவிகள் பெற்று இங்கு குடியேறி - தேசிய நீரோட்டத்தில் கலந்தவர்களாகியும் அவஸ்தைக் குள்ளாக்கப் படுவது வேதனைக் குரியது.

அரசு இலங்கையிலிருந்து வரும் மக்களை ஒட்டுமொத்த கணக்கில் எடுத்துக் கொண்டு சட்டங்கள் போடாது - ஆணைகள் பிறப்பிக்காது, ஆராய்ந்து அவரவர் தன்மைக் கேற்ப உரிய ஆணைகள் பிறப்பிக்க வேண்டும் - தாயகம் திரும்பியோர்களை மேற்படி அரசின் உத்தரவு கட்டுப்படுத்தாது என்ற அறிவிக்க வேண்டும் என்று பாதிக்கப்பட்டவர்கள் கோருகிறார்கள் - மக்கள் மறுவாழ்வும் அவர்கள் சார்பில் இந்த வேண்டுகோளை விடுகிறது.

## இலங்கைவாழ் இந்தியத் தமிழர்க்கும் சங்கடம்

1983-ல் இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்தில் தங்கள், வீடு, வாசல்களையும் சொத்து, சுகம் தொழில் மற்றும் உறவினர்களையும் இழந்து உயிருக்குப் பயந்து இங்கு ஓடி வந்த இலங்கைத் தமிழ் மக்கள் மட்டுமின்றி இந்திய மரபுத் தமிழரும் கூட இங்கு ஈழப் போராளிகளின் கைவரிசை காரணமாக மிகவும் தடுமாறிக் கொண்டிருக்கின்றனர்

1983-க்குப் பிறகு 'இலங்கையிலிருந்து இங்கு வந்து தங்கி

(7-ம் பக்கம் பார்க்க)

# சுற்றுப்புறச் சூழல் வழக்குகளை விசாரிக்க தனி நீதி மன்றம் அமைக்கக் கோரிக்கை !

## தன்னார்வக் குழுக்கள் கோரிக்கை !

திண்டுக்கல்லில் ஜூன் 2, சனிக்கிழமை நடைபெற்ற பசுமை நீதிமன்றமும் சுற்றுச் சூழலும் கழித்தரங்கில் கலந்து கொண்ட தமிழகமெங்கிலும் இருந்து வந்திருந்த தன்னார்வக்குழுக்கள் சுற்றுச் சூழல் வழக்குகளுக்கு தனிநீதிமன்றங்கள் அமைக்கும்படி மத்திய அரசை வலியுறுத்தின.

திண்டுக்கல் சுற்றுச் சூழல் கழகமும் அமைதி அறக்கட்டளையும் ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கிற்கு திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சக்தி காந்த தாஸ் தலைமை தாங்கினார். பழனிமலைப் பகுதியை பசுமையாக்கும் தமிழக அரசின் திட்டம் குறித்தும் திண்டுக்கல் தோல் தொழிற்சாலை கழிவுநீர் சுத்தரிக்கும் மையம் நிறுவும் நடவடிக்கைகள் குறித்தும் விளக்கிப் பேசினார்.

திண்டுக்கல் பகுதியில் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி வரும் திண்டுக்கல் சுற்றுச் சூழல் கழகத்தை அவர் பெரிதும் பாராட்டினார். சுற்றுச் சூழல் கல்வியில் ஈடுபட்டுள்ள அமைதி அறக்கட்டளை நிறுவனத்திற்கு அரசின் ஒத்துழைப்பு உண்டு என்று உறுதி கூறினார்.

மாவட்ட நீதிபதி திரு. ஏ,கே ராஜன் பேசும்போது சுற்றுச் சூழல் பிரச்சனை மக்களின் பிரச்சனையாக பார்க்கும்படியும் சூழல் சீர்கேடுகளை பொறுத்தவரை அதிகமாக சட்ட முறைகளையும் சடங்குகளையும் பார்க்கத் தேவையில்லை என்றார்,

உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி பி. என். பகவதி சிறப்புரையாற்றினார். அவர் பேசும் போது சுகாதாரமான சுற்றுச்சூழல் ஒவ்வொரு குடிமகனின் அடிப்படைத் தேவையாகும். உயிர்வாழ உரிமை என்ற அரசியலமைப்புச்சட்டம் அளித்த உரிமையை நாம் சுகாதாரமான சூழலில் வாழ அளிக்கப்பட்ட உரிமை என்றே பொருள் கொள்ளவேண்டும் என்றார். சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கான பல்வேறு முயற்சிகளை விவரித்த அவர் சுயநல சக்திகள் தொடர்ந்து சூழலை மாசுபடுத்தி வருவதைத் தடுக்க சுற்றுச்சூழல் நீதிமன்றங்கள்மிகவும் அவசியமானவையாகும் என்று வலியுறுத்தினார். சுற்றுச்சூழல் என்பது வளர்ச்சிக்கு எதிரானது என்ற கருத்து பலரிடையே இருப்பதை சுட்டிக்காட்டிய அவர் அத்தகைய கருத்து தவறானது என்பதை அனைவருக்கும் உணர்த்த வேண்டும் என்றார். உண்மையில் வளர்ச்சியும் சுற்றுச்சூழலும் ஒன்றுக்கொன்று உதவி செய்பவை. வளர்ச்சி மக்களுக்காகத்தான். ஒன்றில் மக்களை பாதுகாப்பது அவசியமில்லையா என்று நீதிபதி பகவதி கேட்டார். நமது பூமியை அழிவுகளிலிருந்து காப்பாற்றுவது நம் ஒவ்வொருவரின் கடமையாகும் என்றார். சூழலையும் அன்னை பூமியையும் பாதுகாக்க அமைதி அறக்கட்டளையும் திண்டுக்கல் சுற்றுச்சூழல் கழகமும் மேற்கொண்டுவரும் பணிகளைப் பாராட்டிய அவர் பிறதொண்டு நிறுவனங்களும் சூழல் கழகங்களும் அவர்களுக்கு ஆதரவு தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அமைதி அறக் கட்டளை

(4-ம் பக்கம் பார்க்க)

# தாயகம் அனுப்ப முயலும் தமிழர்களை இங்குவரும் அகதிகளுக்கு ஒப்பிடுவதா ?

இலங்கையில் வாழும் இந்திய வம்சாவழித் தமிழர்கள் ஒரு லட்சம் பேரை இந்தியாவிற்கு அனுப்ப வேண்டும் என்ற இலங்கை அமைச்சரின் பேச்சு மனிதாபிமானம் அற்றது.

சிரிமா-சாஸ்திரி ஒப்பந்தப்படி அவர்கள் இந்திய கடவுச்சீட்டு எடுத்திருந்தாலும் அவர்கள் இந்தியாவுக்கு வராதது அவர்களின் குற்றமல்ல. அரசு அந்த மக்களுக்கு போக்குவரத்து வசதி செய்து கொடுக்கத் தவறியதே காரணமாகும். எனவே அன்றைய சூழ்நிலை வேறு, இன்று நிலைமை மாறி விட்டது. அவர்கள் எந்த நாட்டில் வசிக்க விரும்புகின்றார்கள் என்பதை சம்மந்தப்பட்ட மக்களின் பிரதி நிதிகளைக் கலந்தாலோசிக்காமல் செய்யப்பட்டது.

ஒப்பந்தம் செய்யப்பட்டு கால் நூற்றாண்டு கடந்து விட்டது. அவர்களின் புதிய சந்ததியினரிடம் ஒப்பந்தத்தை திணிப்பது எந்த வகையிலும் நியாயம் ஆகாது. இந்தியாவையே தெரியாது இலங்கையில் பிறந்து இலங்கையின் பொருளாதாரத்தின் முதுகு எலும்பாக உழைத்து வரும் இந்திய வம்சாவழித் தமிழர்களை தமிழகத்தில் தஞ்சம் புகுந்துள்ள அகதிகளோடு ஒப்பிட்டு, பண்டமாற்று அடிப்படையில் இந்திய இலங்கைத் தலைவர்கள் பேசுவது கொஞ்சம் கூட பொறுத்தம் அற்றது. இந்த தமிழ் மக்களின் பிரச்சினையைப் பொறுத்தவரை மனிதாபிமான ரீதியில் சிந்தித்து செயல்படுத்த வேண்டும்.

தமிழகத்தில் வன்முறையைத் தூண்டுபவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும். அதே நேரத்தில் உண்மையான அகதிகள் பாதிக்கப்படாமல் பாதுகாக்கப் பட வேண்டும்.

இலங்கைத் தமிழர்கள் தமிழகத்தின்மீது காலம் காலமாக தாய்பாசம் வைத்து போற்றிவந்தார்கள். அவர்கள் பாதிக்கப்பட்டு இங்கு வரும்போது அரவணைக்கத் தவறினால் அவர்களுக்கு ஆதரவு தரும் உலக நாடுகள் . தமிழகத்தின் நிலை கண்டு கைகொட்டி சிரிக்கும் நிலையே ஏற்படும். நாமது சகோதரர்களுக்கு உதவி செய்வதில் நாமே முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

அனைத்திலங்கை அண்ணா திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளரும் அண்ணா தாயகம் திரும்பியோர் நலப் பேரவையின் தலைவருமான, ஏ. நெய்னார் மேற்கண்டவாறு கூறியுள்ளார். ○

(முன் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் ஜே. பால்பாஸ்கர் பேசும்போது அறக் கட்டளை ஆற்றிவரும் கல்வி மற்றும் சுற்றுச்சூழல் பணிகளைக் குறித்து விவரித்தார். திண்டுக்கல் நகரில் தோல் தொழிற்சாலை கழிவு நீர் மையம் நிறுவன நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருவது தாங்கள் மேற்கொண்ட பல்வேறு முயற்சிகளில் சாத்தியமாயிற்று என்றார். அத்தகைய நிலையங்கள் விரைவில் நிறுவப்பட்டுவிடும் என்று இவர் நம்பிக்கை தெரிவித்தார்.

ஆந்திரா மாநில தொண்டு நிறுவனமான 'அலேர்' தலைவர் டாக்டர் பி.கே.ஓய். மாதவன் நாட்டின் வளர்ச்சிப்பணிகளில் விழிப்புணர்வுக் கல்வி அளிப்பதில் முன்னணியில் நிற்கும் தொண்டு நிறுவனங்கள் அனைத்துமே மாநில அளவிலும் தேசிய அளவிலும் ஒன்று சேரவேண்டும் என்று அறை கூவல் விடுத்தார்.

தமிழக தன்னார்வ குழுக்களின் தற்காலிக பத்து பிரதிநிதிகள் கொண்ட கமிட்டி அமைக்கப்பட்டது. அமைதி அறக் கட்டளை தலைவர் ஜே. பால் பாஸ்கர் மதுரை சோக்கோ அறக்கட்டளை இயக்குநர் அ. மகபூப்பாட்சா ஆகியோர் இவற்றின் அமைப்பாளர்கள்.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளின் சூழல் சீர்கேடுகள் அவற்றிற்கு எதிராக எடுக்கப் பட்ட நடவடிக்கைகள் குறித்து தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள் விரிவாகப் பேசினர். கூட்டத்தின் முடிவில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

1 சுற்றுச்சூழல் சீர்கேடுகளை விசாரித்தற்காக தனி நீதிமன்றங்கள் உடனே நிறுவ வேண்டும்.

2. சுற்றுச்சூழல் பாதுகாப்பென்பது வளர்ச்சிக்கு எதிரானதல்ல என்று சுயநல சக்திகள் பிரச்சாரம் செய்வதை இக்கூட்டம் கண்டிக்கிறது. சூழல் பாதுகாப்பும் பொருளாதார வளர்ச்சியும் சரிவர இருக்க வேண்டுமென்றால் சூழல் நீதிமன்றங்களே ஒரு சரியான வழியாகும்.

3. தேசிய அளவில் அதிக பட்ச அதிகாரம் கொண்டு சுற்றுச்சூழல் கமிஷன் நிறுவப்பட்டு மாவட்டந்தோறும் கிளைகள் திறக்கப்பட வேண்டும்.

4. தமிழகமெங்கிலும் உள்ள தோல் தொழிற்சாலைகளுக்கான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவும் பணியை துரிதப்படுத்த வேண்டும். ஆங்காங்கே உள்ள தொண்டு நிறுவன பிரதிநிதிகள் இருவரேனும் மாதக் கட்டுப்பாடு பணிகளை கண்காணிக்கும் குழுவில் இடம் பெற ஏற்பாடு செய்ய வேண்டும்.

5. தொண்டு நிறுவனங்களுக்கு இடையே சரியான தகவல் தொடர்பும் ஒற்றுமையும், ஏற்பட ஏதுவாக குழுக்களின் சுயேச்சை தனைமை மதிக்கப்படும் விதத்திலான தமிழக ஒருங்கிணைப்பு ஒன்று ஏற்படுத்த வேண்டும் என்று தீர்மானித்தது. நீதிபதி பகவதி அவர்களை தலைவராகக் கொண்டு, தொண்டு நிறுவனங்களின் தேசிய கவுன்சிலில் தமிழகக் குழு இணைந்து செயல்படும்.

சுற்றுச் சூழல் நீதிமன்றங்களை நிறுவக்கோரி வற்புறுத்தி தமிழக தன்னார்வ தொண்டு நிறுவனப் பிரதிநிதிகளின் சார்பில் அமைதி அறக்கட்டளை திண்டுக்கல் சுற்றுச் சூழல் கழகத்தினர் பிரதமர் வி.பி. சிங், சுற்றுச்சூழல் இணை அமைச்சர் திருமதி மேனகா காந்தி ஆகியோரை விரைவில் சந்திப்பார்கள் என்று அதன் தலைவர் ஜே.பால்பாஸ்கர் தெரிவித்தார்.

கருத்தரங்கிற்கு வந்திருந்தவர்களுக்கு சுற்றுச்சூழல் கழகச் செயலாளர் எல்.அந்தோணி சாமி நன்றி தெரிவித்தார். O

# தாயகம்திரும்பியோர் கூட்டுறவு வங்கி

## சார்பாளர்தேர்வில் போட்டியின்றி தெரிவுகள்

தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கியின் பிரதிநிதிகள் பேரவைக்கான சார்பாளர்கள் (டெலிகேட்கள்) தெரிவு செய்யும் தேர்தல் ஜூலை 25-ந் தேதி நடைபெற விருக்கிறது. இத்தேர்தலுக்கான மனுக்கள் ஜூன் மாதம் 9-ந் தேதியாகும்.

இத்தேதிவரை மனு செய்ததில் (உரிய தேர்வுக்கு எதிர்த்துப் போட்டியிடுவோர் மனு செய்யாமல் போனதால்) பலர் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டனர்.

மொத்தம் 32 தொகுதிகளில் 13 தொகுதிகளில் தெரிவு செய்யப்பட வேண்டியவர்கள் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டனர்.

4 தொகுதிகளில் மட்டும் கடும் போட்டி நடைபெற விருக்கிறது. 11 தொகுதிகளில் யாரும் போட்டியிடவில்லை. 4 இடங்களில் இன்னும் எந்த தகவலும் தெரியவில்லை.

போட்டியின்றி தெரிவு செய்யப்பட்ட தொகுதிகள் (அடைப்புக்குள் இருப்பது தெரிவு செய்யப்பட வேண்டியவர்கள். அடைப்பில்லாதது தெரிவு செய்யப்பட்டவர் தொகை மற்றும் போட்டியிடுபவர் தொகை)

1. வ.சென்னை 1 (13) 9
2. வ.சென்னை 2 (13) 11
3. தெ.சென்னை (11) 2
4. செங்கை (5) 2
5. கர்னாடகம் (4) 4
6. ஸ்ரீகாகுளம் (3) 3
7. கரீம் நகர் (1) 1
8. திருச்சி (17) 17
9. தஞ்சை (9) 9
10. புதுக்கோட்டை (3) 3
11. பெரியார் (5) 5
12. கோவை (6) 6
13. கேரளா (1) 1

### போட்டி நடைபெறும் தொகுதிகள்

1. வடாற்காடு அம்பேத்கார் (6) 10
2. தென்னாற்காடு பாண்டிச்சேரி (6) 8
3. மதுரை (5) 7
4. சேலம் (5) 11

### மனு செய்யப்படாத தொகுதிகள்

1. திருவண்ணாமலை சம்புவராயர் (1)
2. விசாகப்பட்டிணம் (9)
3. கிழக்கு கோதாவரி மாவட்டம் (3)
4. மேற்கு கோதாவரி (1)
5. கிருஷ்ணா (1)
6. ஹைதராபாத் (2)
7. திண்டுக்கல் காயிதே மில்லத் (1)
8. இராமநாதபுரம் (7)
9. கன்னியாக்குமரி (1)
10. திருநெல்வேலி கட்டபொம்மன் (2)
11. நீலகிரி (1)

### தகவல் கிடைக்காத தொகுதிகள் (இது பிரசுரமாகும் வரை)

1. பசும்பொன்
2. காமராசர்
3. சிதம்பரனார்
4. தர்மபுரி

இத்தேர்தலில்மொத்தம் 155 சார்பாளர்கள் தெரிவு செய்யப் படவேண்டும். இதுவரை போட்டியின்றி தெரிவு செய்யப்பட்ட இடங்களிலும் போட்டி நிலவுகின்ற இடங்களிலும் தகவல் தெரியாத இடங்களுமாக சேர்த்தால் 109 சார்பாளர்கள் நடப்பு பிரதிநிதித்துவ சபைக்கு தேர்ந்தெடுக்கப் படுவார்கள். ❋❋

## சுற்றுச் சூழல் குறித்த சிந்தனைச்சித்திரம்

# மரம் என்றால் என்ன ?

ஒரு குகை நுழைவாயில் உட்கார்ந்து ஒரு கிழவர் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அவருக்கு முன்னாள் ஒரு சிறுவன் தரையில் ஒரு குச்சியைக் கொண்டு கிறுக்கிக் கொண்டிருந்தான். கல்லின் மேல் சூரிய உஷ்ணத்தில் உணவைத் தயாரித்துக் கொண்டிருந்தார்கள்.

உஷ்ணம் கொதிக்கிறது. உஷ்ணக்காற்று வீசுகிறது. பாறையின் நிழலைத் தவிர மரங்களோ செடிகளோ இல்லை. புல்கூட முளைக்க 'வில்லை. வானில் சூரியன் தகதகவென்று ஒளி வீசிக்கொண்டிருக்கிறது.

தரையில் கிறுக்கிக் கொண்டிருந்த சிறுவன் அதை நிறுத்தி விட்டு கிழவரை உற்றுப் பார்த்து, ''தாத்தா எனக்கு ஒரு கதை சொல்லு'' என்று கோரினான்.

''என் கதை சொல்லனும்?'' என்றார் கிழவர்.

''அன்னிக்குச் சொன்னியே மரத்தின் கதை அதை சொல்லு''

கிழவர் கதை சொல்லித் தயாரானார். அதற்குள் சிறுவன் ''மரம்னு சொல்றியே, அது எப்படி இருக்கும்?'' என்று கேட்டான். ''அதுவா நான் சின்ன வயசில பார்த்தது. அது உயரமா, பச்சையா இருக்கும்.''

''அது நமக்கு என்ன தரும்?''

''நிழல் தரும், பழம் தரும்; விறகு தரும்''

''விறகுன்னா என்ன?''

''அதைக் கொண்டு தீ மூட்டலாம். சமைக்கலாம்''

''மரம் என்னத்தைச் சாப்பிடும்''

''அது சாப்பிடாது. குடிக்கும். தண்ணீரை உறிஞ்சும்''

''தண்ணீர் எங்கே இருக்கும்?''

''தரையின் உள்ளே இருக்கும்''

''அது எங்கே இருந்து வந்தது''

''வானத்தில் ;இருந்து மழையாக வந்தது?''

''மழையின்னா என்னா?''

''அது நீர்த்துளி''

''அது 'ஏன் இப்போ காணோம்?''

''மரங்கள் இல்லை. மழையும் இல்லை''

''அழிஞ்சுப் போச்சு''

''ஏன் அழிஞ்சுப் போச்சு

''மனிதன் தான் அழித்தான் எல்லாவற்றையும் விரைந்து அனுபவிக்க வேண்டு மென்று ஆத்திரத்தில் அழித்து விட்டான்''

''மரத்தின் கதை முடிந்து விட்டது. சிறுவன் மௌனமானான் மீண்டும் தரையில் கிறுக்கத் தொடங்கினன்.

இந்த நிகழ்ச்சி நடைபெற்றது. கி.பி.3099-ம் ஆண்டில்

சிறுவன் மீண்டும் விழிப் புற்றவனைப் போல நிமிர்ந்துப் பார்த்து, ''தத்தா மரம் பச்சையா இருக்கு மின்னியே, பச்சை எப்படியிருக்கும்?''

கிழவர் இதற்கு பதில் சொல்ல இயலாமல் விழித்தார். சுற்றுமுற்றும் பச்சையான ஏதாவது ஒன்று இருந்ததால் தானே அதைக்காட்டி விளக்க முடியும்? கி.பி.3089 ஆண்டுக்கு முன்னாடி பச்சையான மரம், செடி, கொடி, புல் பூண்டுகள் எல்லாம் அழிந்துப் போயின.

கிழவர் தமது சிறுவயது பிராயத்தை கற்பனை செய்து பார்த்தார். அப்போது இங்கு மங்கும் சிறு மரங்கள் இருந்ததைப் பார்த்திருக்கிறார். அதன் நிழலில் உட்கார்ந்திருந்தது நினைவுக்கு வருகிறது. அதற்கு முன்னால் அங்கு ஏராளமான மரங்கள் காடுகளாக இருந்ததை அவருடைய தாத்தா தம்மிடம் கூறியதும் நினைவுக்கு வருகிறது.

''என்ன தாத்தா பேசாமல் இருக்கிறீங்க? பச்சை என்றால் என்ன? என்று சிறுவன் மீண்டும் கேட்டான்.

தாத்தாவின் கண்கள் கலங்கின கண்ணீர்த் துளிகள் அவரது கன்னங்களில் முத்து முத்தாக வழிந்து சிறுவனுடைய திறந்த கையில் துளிர்த்தது. சிறுவன் கையை மூடிக் கொண்டான்.

இக்கதை 20-ம் நூற்றாண்டு மனிதனை எச்சரிப்பதற்காக எழுதப்பட்டது. இயற்கையோடு மோதி அதை அழிக்கும் போக்கு மாறாவிட்டால் கி.பி. 3089-ம் ஆண்டில் உலகம் எப்படி இருக்கும் என்பதை இது உறுத்திக் காட்டுகிறது. இக் கதை 'ஹிந்து' (18-8-89) நாளிதழில் வெளியயுள்ளது.

## அடிப்படைத் தேவை கிடைக்கப் பெறாத மக்கள்

| | |
|---|---|
| போஷாக்கு குறைவு | 51 கோடி |
| கல்வியறிவு இல்லாத பெரியவர்கள் | 80 கோடி |
| பள்ளிபடிப்பு இல்லாத பிள்ளைகள் | 25 கோடி |
| உடல்நலம் கவனிப்பு இல்லாதவர்கள் | 150 கோடி |
| 60 வயதுக்குட்பட்ட வாழ்க்கை | 170 கோடி |
| தங்குவதற்கு வீட்டு வசதியில்லாதவர்கள் | 130 கோடி |

## நமது கல்விக் கூடங்களில்...

| | |
|---|---|
| பள்ளிக்கட்டிடம் இல்லாதவை | 40% |
| கரும் பலகையற்ற பள்ளிகள் | 40% |
| குடிநீர் வசதியற்ற பள்ளிகள் | 59% |
| கழிப்பிட வசதியற்ற பள்ளிகள் | 85% |
| பெஞ்ச், மேசை, பாய் இல்லாத பள்ளிகள் | 34% |
| விளையாட்டு மைதானம் இல்லாத பள்ளிகள் | 53% |
| விளையாட்டுக் கருவிகள் வசதிகள் இல்லாத பள்ளிகள் | 84% |
| ஆசிரியரே இல்லாத பள்ளிகள் | 2937 |
| மொத்த ஆரம்பப்பள்ளிகள் | 5,25,078 |
| மொத்த நடுநிலைப்பள்ளிகள் | 1,34,074 |
| மொத்த உயர்நிலை, மேல்நிலைப்பள்ளிகள் | 60,000 |

## எழுத்தறிவு இல்லாதோர்

1981-ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின்படி நாட்டில் அசாம் மாநிலம் நீங்கலாக மொத்தம் 68.53 கோடி பேரில் 42.43 கோடி பேர் எழுத்தறிவு இல்லாதவர்கள்.

இத்தகவலைமத்திய அமைச்சர் தகவல் மக்களவையில் தெரிவித்தார்.

எழுத்தறிவில்லாத பெண்களின் எண்ணிக்கை 75.10 சதம் என்றும் பல்கலைக்கழக மானியக் குழுவினால் திருத்தி அமைக்கப்பட்ட ஊதிய விகிதம், கேரள மாநிலத்திலுள்ள பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் அமல்படுத்தப்படும் என்று மாநில அரசு, மத்திய அரசிடம் தெரிவித்துள்ளதாக அமைச்சர் கூறினார். O

## இப்'புதுக்காவியம்'....

*தமிழ் இலக்கியத்தில் 'கவிதை' வடிவம் இன்று அரசாட்சி செய்கிற அரிய நேரமிது.

* மரபுக்கவிதையில் மகத்தான காவிய அலங்கார மாளிகைகளை எழுப்பிய கவிதை மன்னர்கள் உண்டு!

* புதுக்கவிதையில் 'காவியம்' படைத்தவர்கள் வெகுசிலரே...

* பட உலகின் கம்பனாக விளங்கிய அமரர் கண்ணதாசன், காற்றுள்ளவரை கவனத்தில் இருப்பார். அத்தகைய அற்புதப் படைப்பாளரே கூட அவர்தம் வாழ்நாளில் 10 காவியங்களை மட்டுமே படைக்க முடிந்தது. அதிலும் முழுமை பெற்றவை மூன்றுமட்டுமே என்கிற போது....காவியம் படைப்பது ஒருவித 'செப்பிடு'வித்தையோ? என்றும் எண்ண வைக்கிறது.

* புதுக்கவிதை உலகின் மிகக்குறைந்த எண்ணிக்கையிலுள்ள பெண் கவிஞர்களில் சுமார் இருபத்தைந்து கவிஞர்களின் நூல்கள் வெளிவந்துள்ளன. எனினும்... அவற்றில் என்னால் தரத்தின் அடிப்படையில் பார்க்கும்போது .. என் தராசு பார்வையில் உயர்ந்தோங்கி நிற்பவர்கள் 1) ரோகிணி 2) இரா.மீனாட்சி 3) பரிமளமுத்து ஆகியமூவர்மாத்திரமே...

இதனை என்னால் விரிவாக, விளக்கமாக, சான்றுகளுடன் விளக்கிட இயலும்.... அதிலும் சமுதாய பார்வையில். கவிதைகள் படைத்தவர் என்கிற அளவுகோலின்படி பார்க்கும் போது மூன்றாவது இடம் முதலிடம் பெறுவதை மறுக்காமல் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்... காரணம் எனது இலக்கிய பயணம், பார்வை; புதுமைப்பித்தன், ஜெயகாந்தன், விந்தன் கைலாசபதி, ரகுநாதன், தி.க.சி, வல்லிக்கண்ணன் டொமினிக்ஜீவா, தமிழ்ஒளி, பட்டுக்கோட்டை வழிவந்ததாகும்....

* கவிஞர் பரிமளமுத்து படைத்துள்ள இந்த 'பூமாலை தேடும் ஒரு பாவை' எனும் சோகசித்திரம்.... கண்ணீர் பூக்களின் காவியம் நாகரிக உலகின் நடைமுறை கொடுமை-

* மற்றபடி.... நீங்களே படித்து விட்டு தீர்ப்பு எழுதுங்கள்

* மலர்களின் வாசனையை மகரந்தங்களுக்கு சொல்லிட இடைத்தரகர்கள் தேவையில்லை

* இனிப்பின் சுவையை எறும்புக்கு எடுத்துச் சொல்ல 'முகவர்கள்' தேவையில்லை.

* இனி படிக்கத் தடையில்லை.

அன்புடன்

**எம். எஸ். தியாகராஜன்**

அமைப்பாளர்,
புதுமலர் இலக்கிய வட்டம்
சென்னை-61

குறுங்காவியம்

# பூமாலை தேடும் ஒரு பாவை

-பரிமளமுத்து-

திருவிழா காணச் சென்ற
சிற்றூர் ஒன்றினிலே
கருவிழிகளைக் கவந்திழுக்கும்
கட்டழகியவளைச் சந்தித்தேன்.

எடுப்பார் கைப்பிள்ளையாய்
இட்ட வேலைகளைச் செய்யும்
துடிப்பான பெண்ணுருவாய்
தோன்றினாள் என் முன்னே

போதை விழிகளுக்குப்
பொழுதெல்லாம் விருந்தாகும்
பாதை தெரியாப் பச்சைப்பிள்ளை
அவளென உணர்ந்தேன்

அவளிடம் பேச முனைந்தேன்
புள்ளியை விட்டு நகரமறுக்கும்
'காம்பஸின்' கூர்முனை போல்
அவள் சிந்தனை
வட்டமிட்டு...வட்டமிட்டு...
அவள் உணர்ந்த
வசந்தத்திற்கே வந்து சேர்ந்தது.

அன்பாக நான் பேசியவுடன்
ஆதரவு தேடி எனை
ஒட்டிக் கொண்டாள்

மழலையானால்
பால் பழம் தின்பண்டம் கேட்கும்
பாவை இவள் கேட்டதோ?...
மணக்க ஒரு மாப்பிள்ளை!...

## 2

பேந்தப் பேந்த நான் விழித்தேன்
என் பிரியத்தை
மூட்டை கட்டிவிட்டு
நகர்ந்து கொண்டேன்.

ஆயினும் என் மனதுள்
ஆயிரம் கேள்விகள் ? ? ?
அலசினேன் அவளின்
அந்தரங்கக் கதைகளை.

கதை கேட்கத்தான்
காதைத் தீட்டினேன்.

அந்தோ! . . .
என் உள்ளம் அல்லவா
சுமையால் உறைந்து போனது.
.......

அவளோ !
வசந்தத்தின் வித்து . . . .
வாலிபத்தின் சொத்து . . .
வடிவத்திலோ வெண்முத்து . . .
வாய்திறந்தாலோ பித்து . . .

அவள் முன்
வர்ணனைகள் பின் தங்கும்
வார்த்தைகள் மரணிக்கும்
அழகினிலோ அவள் நிறைமதி
அறிவினிலோ குறைமதி

## 3

அவள் !. . .
பருவத்தின் வசந்த காலம்
பாவம் மனமோ இலையுதிர்காலம்
உருவத்தில் நிகழ்காலம்.
உள்ளத்தில் இறந்த காலம்.

இரு படைப்பாளிகளின்
ஏகாந்தத்தில் உருவாகி
தெருப் புழுதியினிலே
திக்கற்று வளர்த்தாள்.

தந்தையின் முகமறிவாள்.
தாயின் குரலறிவாள்
உறவுகளின் நெருக்கத்தில்
உயர்வாகத்தான் பிறந்தாள்.

மகிழ்ந்த பெற்றோர்
மழலைக்கு வைத்ததோ
மலர்விழி எனும் பெயர்.
மயங்க வைக்கும் அழகோடு
மங்கை அவள் வளர்ந்தாள்.

பேரழகித் தாயோ ...
ஊரறியா ஒருவனுடன்
சினிமா மோகத்தால்
சீரழிய சென்னை நோக்கிச்
சிறகடித்துப் பறந்து விட்டாள்.

(வளரும்)

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ள அனைவருமே, தக்க பயணச் சான்றிதழ், விசா என்பன தங்களிடம் இல்லையானால் அருகிலுள்ள காவல் நிலையங்களில் தங்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று அரசு ஒட்டுமொத்தமாக உத்தரவிட்டிருப்பதே அவர்களது தடுமாற்றத்துக்குக் காரணமாகும்.

தனி ஈழம் கேட்டு ஈழப் போராளிகள் நடத்தியபோராட்டத்தால் வடக்கு, கிழக்கிலங்கைத் தமிழ்மக்கள் மட்டுமின்றி நாட்டின் இதர பகுதிகளில் வாழ்ந்த இந்திய மரபுத் தமிழ் மக்களும் இங்கு அகதிகளாக வந்தனர். இந்திய தமிழருக்கும் ஈழப்போராட்டத்துக்கும் எந்த தொடர்பும் இல்லை. இருந்தும் அதிக பாதிப்புகள் இவர்களுக்குத் தான்.

தமிழகத்தை தாயகமாகக் கொண்டிருந்த இவர்களும் கூட தம் தாயகத்துக்கு அகதிகளாக ஓடிவர வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. ஆனால் தமிழக அரசோ இலங்கைத் தமிழர் வேறு, இந்திய மரபுத் தமிழர் வேறு என்று பிரித்துப்பார்க்காமல் அனைவரையும் காவல் நிலையங்களில் 7 நாள் அவகாசத்தில் பதிவு செய்ய உத்திரவிட்டுள்ளது.

இலங்கைத் தமிழரைப் போலன்றி இந்திய மரபுத் தமிழ்மக்கள் இலங்கைக்குத் திரும்பிப் போகும் எண்ணத்துடன் இங்கு வந்து குடியேற வில்லை. இங்கு நிரந்தரமாக தங்கிவிடும் எண்ணமுடைய இந்திய மரபினரின் எண்ணிக்கை அளவுக்கு இலங்கையிலுள்ள இந்திய மரபினருக்கு இலங்கைக்குடியுரிமை வழங்கும் ஒரு யோசனையும் இலங்கை இந்திய அரசுகளின் பரிசீலனையில் இருந்தது.

எனவே இங்கேயே தங்கிவிடும் முடிவுடன் உள்ள இந்திய மரபுத் தமிழரையும் காவல் நிலையங்களில் பதிவு செய்யச் சொல்லியிருப்பது சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

எனினும் மதுரை, திருச்சி முதலான நகரங்களில் அநேகர் காவல் நிலையங்களுக்குச் சென்று தங்களைப் பதிவு செய்து கொண்டுள்ளனராம்.

இவர்களில் அநேகரிடம் பாஸ் போர்ட்போன்ற அத்தாட்சிகள் எதுவுமில்லை. பாஸ் போர்ட் உள்ளவர்கள்கூட அவற்றைப் புதுப்பிக்க சென்னையில் உள்ள இலங்கையின் துணைத் தூதர் அலுவலகத்துக்கு அனுப்பிவிட்டு அது கிடைக்காதா? இல்லையா என்ற தாக்கல்கூட தூதரகத்திலிருந்து கிடைக்காது விரக்தியுற்ற நிலையில் உள்ளனர்.

காவல் நிலையங்களுக்குச் சென்றாலும் இவர்களிடம் முறையான பாஸ்போர்ட், விசா இல்லாததால் போலிசார் கண்டபடி மிரட்டுவதாக இவர்கள் புகார் செய்கின்றனர். இவர்களுக்கு வாடகை வீடுகள் கொடுத்துள்ளவர்கள் கூட தமிழக அரசின் உத்தரவால் இவர்களை மிகவும் தொல்லைப்படுத்துவதாகப் புகார் செய்யப்படுகிறது.

இலங்கையிலிருந்து வந்த இந்தியத் தமிழர் பலர் பதிவினால் இலங்கைக் குடிகளாக இருந்தாலும் அவர்கள் தமிழகத்தைத் தாயகமாகக் கொண்டவர்கள். இங்கு அவர்களில் பலருக்கு பூர்வீகச் சொத்து என்பவை கூட உண்டு. இங்கேயே நிரந்தரமாக தங்கிடும் நோக்கில் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டிருக்கும் இவர்கள் அரசின் புதிய உத்தரவால் குழப்பிப் போயுள்ளனர். தனி ஈழக்கோரிக்கையோடு இவர்களுக்கு எவ்விதத் தொடர்பும் இல்லாத போதிலும் அதற்காக பெரும் விலை கொடுத்தவர்கள் இவர்கள் இந்திய மரபுத் தமிழ் மக்களிடம் இலங்கைக்குத் திரும்பும் உத்தேசம் இல்லை. எனவே அரசு இலங்கைத் தமிழரையும் ஒன்றாகக் கருதக் கூடாது என்பதோடு, அரசு உரிய உத்தரவை யிட வேண்டும். O

## எழுத்தறிவு இல்லாதோர்

தமிழ் நாட்டில் 16 வயதிலிருந்து 35 வயது வரை எழுத்தறிவு இல்லாதவர்கள் 35 லட்சம் பேர் உள்ளனர் என்று விழா ஒன்றில் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார். O

## கிராம இளைஞர்களுக்கான
# சுய வேலைவாய்ப்பு பயிற்சி

கிராம இளைஞர்களுக்குச் சுய வேலைவாய்ப்பிற்கான பயிற்சி அளிக்கும் திட்டத்தின் கீழ் (TSYSEM) ஒரு வட்டாரத்திற்கு 35 இளைஞர்கள் விதம் தமிழகத்தில் உள்ள 384 வட்டாரங்களில் உள்ள இளைஞர் இளைஞர்களுக்கு நடப்பு ஆண்டில் பயிற்சி அளிக்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

1980-ம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தின் மூலம் கடந்த மார்ச் மாதம் வரை 3.31,296 இளைஞர்கள் சுய வேலை வாய்ப்பிற்கான பயிற்சி பெற்றுள்ளனர் என்று தமிழக ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் ஆர். ஆறுமுகம் கூறினார்.

கிராமப்புற தொழில் நுட்ப மற்றும் மக்கள் முன்னேற்ற நடவடிக்கை கவுன்சில் என்ற அமைப்பும், தமிழக கிராம வளர்ச்சி வாரியமும் இணைந்து சமீபத்தில் சென்னையில் தேசிய ஊரக வளர்ச்சித் திட்டம்; கிராமப் பகுதி மகளிர், குழந்தைகள் நல மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் செயல் பாடு குறித்த கருத்தரங்கு ஒன்றை நடத்தியது. இந்தக் கருத்தரங்கில் ஆறுமுகம் பங்கேற்றுப் பேசினார். அப்போது அவர் மேலும் கூறியதாவது:-

கிராம இளைஞர்களுக்குச் சுய வேலை வாய்ப்பிற்கு பயிற்சி அளிக்கும் திட்டத்தின் கீழ் இதுவரை பயிற்சி பெற்றுள்ள 2,31,296 பேர்களில் 1,13,915 இளைஞர்கள் சுய தொழில் தொடங்கியுள்ளனர். மேலும் 1,62,636 பேர் ஊதியம் பெறும் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர் என்றார்.

கிராமப் பகுதி மகளிர், குழந்தைகள் நல மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கிராமப் பகுதி பெண்களுக்கு தொழிற் பயிற்சியும், வருவாய் தரத்தக்க கைத்தொழில்கள் செய்ய வசதியும் அளிக்கப்படுகின்றன. இந்தத் திட்டத்தின் படி பெண்கள் ஒரு குழுவாகச் சேர்ந்து தொழில் தொடங்குகின்றனர்.

தமிழகத்தில் ஒன்பது மாவட்டங்களில் இத்திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. 1984-ம் ஆண்டு முதல் 1989-90ம் ஆண்டுவரை ரூ. 896.56 கோடி ஒதுக்கப்பட்டது. இதில் ரூ. 330.35 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் திட்டத்தின் மூலம் 23.51 லட்சம் குடும்பங்கள் பயனடைந்துள்ளன. O

## ஆதிதிராவிடருக்கு இட ஒதுக்கீடு!

ஹரிஜனங்களுக்கும் பழங்குடியினருக்கும் தனித்தனி இட ஒதுக்கீடு செய்ய தமிழக அரசு முடிவு செய்துள்ளது. சென்னை நீதிமன்ற தீர்ப்பொன்றில் அடிப்படையில் இந்த முடிவு மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

இதன்படி ஹரிஜனங்களுக்கும், பழங்குடியினர் ஆகியோருக்கு இதுவரை மொத்தமாக இருந்து வந்த 18 சத இட ஒதுக்கீட்டுக்குப் பதில் ஹரிசனங்களுக்கு தனியாக 18 சதமும், பழங்குடியினருக்கு 1 சதமும் கல்வி-வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு செய்ய முடிவு எடுத்திருக்கிறது.

இந்த தனி இட ஒதுக்கீடு காரணமாக ஏற்படும் கூடுதல் இட ஒதுக்கீடான ஒரு சதத்தைச்சரிக்கட்ட பொது தொகுப்புப்பிரிவான 32 சதம் இனி 31 சதமாகக் குறைக்கப்படும். ஏற்கனவே பிற்படுத்தப் பட்டவர்களுக்கு ஒதுக்கப்பட்டு வந்த 30 சதத்திலும் மிகப்பிற்படுத்தப்பட்டவர்கள், சீர்மரபினருக்கும் ஒதுக்கப்பட்டிருந்த 20 சதத்திலும் எந்த மாறுதலும் என்று தெரிவிக்கப்படுகிறது - இத்தகவலை முதலமைச்சர் கருணாநிதி பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்திருக்கிறார். O

Regd. No. R. N. 42556/83 Regd. No. TN/MS(C) 702

MAKKAL MARUVAZHVOO

மக்கள் மறு வாழ்வு

முகவரி :
அஞ்சல் பை எண்: 5560
சென்னை-600 094

# அகதிகளாகப் பதிவு செய்வது அவசியமாகும்!

## ஈழ ஏதிலியர் மறுவாழ்வு கழகம் வேண்டுகோள் !!

"இலங்கையில் நடைபெற்ற இனக்கலவரங்களைத் தொடர்ந்து தமிழ் நாட்டுக்கு வந்த சகலரும் அவர்கள் அரசு அமைந்த முகாம்களில் இருந்தாலும் பல்வேறு இடங்களில் தாங்களாகவே வசதிகளைத் தேடிக் கொண்டு வாழ்ந்தாலும் தாங்கள் வசிக்கும் இடங்களிலுள்ள மாவட்ட ஆட்சியாளரிடமோ அல்லது தாசில்தார்களிடமோ அகதிகளாகப் பதிவு செய்வது அவசியமாகும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்," என்று ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் நிறைவேற்றச் செயலாளர் திரு. வே. சிவகுமாரன் தெரிவித்துள்ளார். மேலும் தெரிவித்துள்ளதாவது-

முகாம்களிலுள்ளவர்கள் அங்கு பொறுப்பதிகாரிகளாகக் கடமை பார்க்கும் தனித்துணை ஆட்சியரால் இயல்பாகவே பதிவு செய்யப்பட்டு விடுவார்கள். முகாம்களுக்கு வெளியே வாழும் அகதிகள் தங்களை அகதிகளாகப் பதிவு செய்வதில் தயக்கங் காட்டி வருவதாக அறிகிறோம். இந்திய சட்டப்படி இந்தியாவில் தஞ்சம் புகுந்த இலங்கை அகதிகள் அனைவரும் முறைப்படி பதிவு செய்யும்படி வேண்டப்படுகின்றனர்.

கடவுச்சீட்டுடன் 'விசா' பெற்று வந்தவர்களுக்கு கடந்த சில ஆண்டுகளாக 'விசா' புதுப்பிக்கப்படவில்லை இவர்களிடம் அகதி அடையாள அட்டை இருக்குமானால்' "சட்ட விரோதமாக இந்த நாட்டில் உலவுகிறார்கள்" என்று குற்றச்சாட்டுக்கு இடம் ஏற்படாது கடவுச் சீட்டு இல்லாது வந்தவர்களுக்கும் இந்த பாதுகாப்பு கிடைக்கும்.

அகதிகளாகப் பதிவு செய்வதால் பிள்ளைகள் பள்ளிப் படிப்பையோ, கல்லூரி மற்றும் மருத்துவ, தொழில் நுட்ப, பொறியியல் கல்வியையோ பெறுவதற்கு வாய்ப்புகள் உள்ளன இது மட்டுமல்லாமல் இலங்கை திரும்பும் போது ரூபா இருபத்தி ஐந்தாயிரம் வரை மறுவாழ்வு உதவி கிடைக்க இடமுண்டு.

ஆகவே, காலதாமதமின்றி அகதி அடையாள அட்டை பெற உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இதுதொடர்பாக மேலதிக விபரங்கள் வேண்டுவோர் சென்னையிலுள்ள அலுவலகத்திலோ அல்லது கீழே தரப்பட்டுள்ள திருச்சி அலுவலகத்திலோ வேலை நேரங்களில் தொடர்புகொண்டு தேவையான விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். திருச்சி அலுவலக முகவரி: இல. 21, இரண்டாவது குறுக்குத் தெரு, பொன்னகர், திருச்சி-620001.

சென்னை அலுவலகம்: 3வது மாடி, இல 14 சேட் குடியிருப்பு, முதல் தெரு, சென்னை 600008. ○

இலங்கையின் மலைமுகடுகளிலும்,
தேயிலை, ரப்பர் தோட்டங்களிலும் வாழும்
மலையகத் தமிழர்களின் அரசியல், சமூக, பொருளாதார
கலை, இலக்கிய இதழ்

கொழுந்து

ஆசிரியர் : அந்தனி ஜீவா

தமிழகத்தில் விபரங்களுக்கு :

மக்கள் மறுவாழ்வு
அஞ்சல் பை எண்: 5560
சென்னை - 600 094

Editor & Publisher : K.S. RAJU, 1, South Gangai Amman Koil 2nd Street, Madras-600094
Printer : L.S. Srinivasan at Jai Kalidas Press, 29, B. E. Colony, 4th Street, Madras-600024